# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 234/நகராட்சி/2017**
**நாள் : 17/12/2018**

**திரு ந. ஜெயச்சந்திரன்,**
**இராணிப்பேட்டை.** – **முறையீட்டு மனுதாரர்**

**வருவாய் உதவியாளர்,**
**இராணிப்பேட்டை நகராட்சி,**
**இராணிப்பேட்டை.** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, MBT சாலை மேற்குப் பகுதி, எண்.77, வானாபாடி சாலை முகவயிரில் வசிக்கும் திரு ந. ஜெயசந்திரன் அவர்களின் 30.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 234/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, MBT சாலை மேற்குப் பகுதி, 77–கதவு எண்ணிட்ட, வானாபாடி சாலை முகவயிரில் வசிக்கும் திரு ந ஜெயசந்திரன் என்பவர், இராணிப்பேட்டை நகராட்சி, வானாபாடி சாலை (வார்டு எண்.3), எண்–77 உள்ள தனது குடிசை வீட்டிற்கு 890 எண்ணிட்ட வரிவிதிப்பில் 2003–2004 ஆண்டு முதல் 2012 –2013–ஆம் ஆண்டு வரை தொடர்ந்து சொத்துவரி செலுத்தி வந்ததாகவும், தற்பொழுது மேற்குறிப்பிட்டு வரி விதிப்பு எண்ணுள்ள சொத்துவரி திருமதி A. வனஜா என்பவர் பெயரில் எந்தவித ஆவணங்களும் இன்றி மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு அச்சொத்துவரி விதிப்பினை தன்பெயரில் மாற்றம் செய்திட ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 07.05.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தான் இரண்டு ஆண்டுகள் சொத்துவரி கட்டாத நிலையில் தன் பெயரில் இருந்த சொத்துவரி விதிப்பினை திருமதி வனஜா பெயருக்கு மாற்றம் செய்துவிட்டார்கள் என்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்த பின்பே தன் பெயருக்கு சொத்துவரி மாற்றம் செய்துள்ளார்கள் என்று விசாரணையின் போது தெரிவித்தார். எனினும் சொத்துவரி விதிப்பில் முகவரி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றும் விசாரணையின் போது தெரிவித்தார். எனவே, சரியான முகவரியினை குறிப்பிட்டு இரசீது வழங்க ஆணையிடக் கோரினார்.

3. இராணிப்பேட்டை நகராட்சி ஆணையரிடமும் 12.06.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திலிருந்து பெறப்பட்ட

கடிதத்தின் அடிப்படையில் ஏற்கனவே பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சொத்துவரியும் வசூலிக்கப்பட்டுவிட்டது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்தார். நகராட்சியில் முகவரி மாற்றத்தினை மேற்கொள்ள இயலாது என்றும் நகராட்சி ஆணையரகத்துடன் தொடர்பு கொண்டு முகவரி மாற்றத்தினை சரி செய்து 15 தினங்களில் அறிக்கை அனுப்புவதாகவும் நகராட்சி ஆணையர் தெரிவித்தார்.

4. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் பெயரில் இருந்த சொத்துவரி விதிப்பு எந்தவித ஆவணங்களின்றி திருமதி வனஜா பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் மூன்று ஆணையாளர்களிடம் தொடர்ந்து முறையீடு செய்தும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இறுதியாக இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்த பின்பே சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் இத்தகைய செயல்பாடு ஏற்புடையதல்ல. சிறுசிறு கோரிக்கைகளுக்குக் கூட உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்தால் மட்டுமே தீர்வு காண இயலும் என்று கருதும்நிலை பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ளது. இத்தகைய செயல்பாடு பொதுமக்களின் பாராட்டை பெறாது. எனவே, இனி வரும் காலங்களிலாவது பொதுமக்களின் அடிப்படை கோரிக்கைகளை மனித நேயத்துடன் அணுகுமாறு இராணிப்பேட்டை நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. சரியான முகவரியை குறிப்பிட்டு சொத்துவரி விதிப்பில் திருத்தம் செய்யப்படும். அது சம்பந்தமான அறிக்கை 10 தினங்களில் அனுப்பிவைக்கப்படும் என 12.06.2018 நாளிட்ட விசாரணையின் போது நகராட்சி ஆணையர் தெரிவித்தார். ஆறு திங்கள்கள் கடந்த நிலையிலும் நகராட்சி ஆணையரிடமிருந்து எந்தவித அறிக்கையும் வரப்பெறாதது மிகவும் கண்டிக்கத் தக்கது. எனவே, இதுபோன்ற நேர்வுகளில் பொதுமக்களுக்கு உடனுக்குடன் தீர்வு கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டுமென நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்துமாறு வேலூர் மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, **டிசம்பர்** திங்கள், 17–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு ந. ஜெயசந்திரன்,
எண்.17, வாணபாடி ரோடு,
MBT ரோடு மேற்குப் பகுதி,
இராணிப்பேட்டை,
வேலூர் மாவட்டம்..

2. நகராட்சி ஆணையர்,
இராணிப்பேட்டை நகராட்சி,
வேலூர் மாவட்டம்.

3. நகராட்சிகளின் மண்டல இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
வேலூர்..

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி